மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு
அசல் வழக்கு எண்.161/2024

வா.சா. 1

நாள் 17.09.2025

**7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது தாத்தா சுப்ரமணியம் என்பவருடைய முதல் மனைவியின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா சுப்ரமணியத்திற்கு நடைபெற்ற முதல் திருமணத்தின் பலனாக எத்தனை வாரிசுகள் உள்ளார்கள் என்றால் 3 பெண் வாரிசுகள் உள்ளனர். அந்த பெண் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 3 பெண் மக்களில் 2 பெண் மக்கள் இறந்து விட்டார்கள் ஒரு பெண் மகள் மட்டும் உயிருடன் உள்ளார். எனது தாத்தா சுப்பிரமணியம் வாழ்நாளில் எத்தனை திருமணம் செய்து கொண்டார் என்றால் 2 திருமணங்கள் தான் செய்து கொண்டார். எனது தாத்தா 3 திருமணம் செய்துள்ளார் என்றும் வழக்கிற்காக 2 திருமணங்கள் தான் செய்துள்ளார் என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா சுப்ரமணியத்தின் சட்ட வாரிசுகளை நான் வழக்கில் சேர்க்காததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால்சரியல்ல. பிராது 1 முதல் 3 வரையிலான தபசில் சொத்துக்கள் எனது தாத்தா சுப்பிரமணியத்திற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். 1 முதல் 3 வரையிலான தவசு சொத்துக்களை பொறுத்து நான் கேட்டுள்ள வழக்கு பரிகாரமானது மேற்படி சொத்துக்கள் எனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று பாகப்பிரிவினை கேட்டு உள்ளேனா அல்லது தானபத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு பாகப்பிரிவினை கேட்டு உள்ளேனா என்றால் பூர்வீக சொத்து என்ற முறையில் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

01.07.1946 ம் அன்று சுப்பிரமணியம் பிள்ளை இந்திராணி அம்மாளுக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று விளம்புகை பரிகாரம் கேட்டு எந்த பரிகாரமும் நான் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி சொத்துக்கள் இந்திராணி அம்மாளுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்திராணி அம்மாள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஒரு ஆதரவு ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நிபந்தனைகளுடன் எனது தாத்தா ஒரு ஆவணம் பிறப்பித்து கொடுத்துள்ளார். தான செட்டில்மென்ட் ஆவணத்தின் அடிப்படையில் இந்திராணி அவருக்கு பாத்தியப்பட்ட 1 முதல் 3

வரையிலான பிராது சொத்துக்களை பொறுத்து 3 வது பிரதிவாதிக்கு வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் அடிப்படையில் ஒன்று முதல் மூன்று வரையிலான சொத்துக்கள் மூன்றாவது பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்க ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. திருப்பரங்குன்றத்தில் தான் பிராது 1 முதல் 3 வரையிலான சொத்துக்கள் அமைந்துள்ளது என்றால் சரிதான். இந்திராணி அம்மாள் எங்கே வசித்து வந்தார் என்றால் திருப்பரங்குன்றத்தில் தான். இந்திராணி அம்மாள் இறந்த பின்பு அவருடைய இறுதிச் சடங்கிற்கு நான் சென்றேனா என்றால் கலந்து கொண்டேன். எப்போது காலம் சென்றார் என்றால் 2000 ம் வருடத்தில். இந்திராணி அம்மாள் இறப்பதற்கு முன்பே அவர் 3 வது பிரதிவாதிக்கு பிராது 1 முதல் 3 வரையிலான சொத்துக்களை பொறுத்து கிரையம் எழுதிக் கொடுத்த விபரம் எங்களுக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. உரிய சட்ட காலத்திற்கு உட்பட்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு 1 முதல் 3 வரையிலான சொத்துக்கள் 3 வது பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் மேற்படி 3 வது பிரதிவாதி இறந்த பின்பு அவரது வாரிசுகளான 7 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளுக்கு தபசில் சொத்துக்கள் வாரிசு அடிப்படையில் அடைந்து அனுபவித்து வருகின்ற நிலையில் சொத்துக்களில் உரிமை கோருவதற்கு எனக்கோ மற்ற வாதிகளுக்கும் எவ்வித உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வழக்குரையில் எனது தாத்தா சுப்ரமணியம் பிள்ளையின் மூத்த தாரத்தின் வாரிசுகளுக்கு எனது தாத்தா உயிருடன் இருக்கும் பொழுதே சொத்துக்களை ஒதுக்கி கொடுத்ததால் மற்ற சொத்துக்களில் உரிமை இல்லை என்று குறிப்பிட்டு உள்ளதை சான்றளிக்கும் வகையில் ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சுப்பிரமணியம் பிள்ளையின் பெண் வாரிசுகளுக்கு அவர் உயிருடன் இருக்கும் பொழுது தகுந்த சீர் வரிசைகள் கொடுத்து திருமணம் செய்து கொடுத்துள்ளதால் அவருடைய சொத்துக்களில் உரிமை கோர முடியாது என்பதை சான்றளிக்கும் வகையில் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு